## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.71/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கல்யாண்குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : முருகேசன் | ஜாதி | : -- |
| வயது | : 62 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : காவல் ஆய்வாளர் | வட்டம் | : திருத்தணி |

**28.04.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கல்லூரி படிப்பை பாதியின் நிறுத்திவிட்டு வேலைக்கு சென்றுவிட்டேன். நான் தற்போது கடப்பாவில் காவல் ஆய்வாளராக உள்ளேனா என்றால் நான் இதற்கு முன்பு கடப்பாவில் பணிபுரிந்தேன். தற்போது விஜயவாடாவில் பணிபுரிந்து வருகிறேன். நான் எத்தனை வருடங்களாக ஆந்திராவில் பணிபுரிகிறேன் என்றால் 30 வருடங்களாக பணிபுரிகிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் பெரியார் நகர் திருத்தணியில் குடியிருப்பதாக விலாசம் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் பெரியார் நகர் திருத்தணியில் குடியிருப்பதை காட்ட ஆதார் அட்டையோ, வேறு முகவரி சான்றோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த முகவரி சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் ஆவண பட்டியலில் ஆதார் அட்டையோ வேறு முகவரி சான்றோ காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் ஆந்திராவில் ஆய்வாளராக உள்ளதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

என்னை கேட்கவில்லை எனவே நான் தாக்கல் செய்யவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் **"தற்போது இரண்டு வருடம் பணி நீட்டிக்கப்பட்டுள்ளது"** என கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பணி நீட்டிக்கப்பட்டுள்ளதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் என் மகன்தான் குடியிருக்கிறார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான்தான் குடியிருக்கிறேன்.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் **"தற்போது என் மகன் குடியிருக்கிறான்"** என நான் கூறியிருப்பதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தை வேறு யாருக்கேனும் வாடகைக்கு விட்டுள்ளேனா என்றால் இல்லை. என் மகன்தான் குடியிருக்கிறான். என் வீட்டிற்கு அருகே அஷோக் குமார், வடிவேலு, ஷியாமளா, ஞானசேகர், விஜயா குடியிருக்கிறார்களா என்றால் குடியுள்ளார்கள். அவர்கள் நான் கட்டிய வீட்டில்தான் வாடகைக்கு உள்ளார்கள் என்றால் இல்லை. வழக்கு சொத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையர் நியமணம் கோரினால் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை இல்லை. (சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்) என் சொத்தை அளவீடு செய்ய ஆட்சேபணை உள்ளது.

4. வழக்கு சொத்தில் அஷோக் குமார், வடிவேலு, ஷியாமளா, ஞானசேகர், விஜயா ஆகியோர்கள் நான் கட்டிய வீட்டில்தான் குடியுள்ளார்கள் என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு பாதை எந்த பக்கம் உள்ளது என்றால் தெருவில் இருந்து எனது சொத்தின் வழியாக வழக்கு சொத்திற்கு வரவேண்டும். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் தெரு உள்ளது என்றால் இல்லை. வடக்கு பக்கம் சின்னா ரெட்டி வீடும், அன்புரோஸ் என்பவரது காலி மனை உள்ளது. கிழமேல் பாதையில் இருந்து வடக்கில் இருந்து தெற்கு நோக்கிதான் வழக்கு சொத்திற்கு செல்ல முடியும் என்றால் இல்லை. சின்னப்ப ரெட்டியின் வீட்டின் கிழக்கே யார் உள்ளார் என்றால் அன்புரோஸ் என்பவரது காலி மனை உள்ளது.

5. அன்புரோஸ் மனைக்கு கிழக்கே ஹேமாவதி, ராசாத்தி ஆகியோரது மனை உள்ளது என்றால் இல்லை. சின்னப்ப ரெட்டியின் வீட்டில் இருந்து 4வது வீடுதான் பிரதிவாதி வீடு என்றால் இல்லை. பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி எனது சுற்றுச்சுவரை இடித்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில்

சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். (சாட்சி பின்வருமாறு மாற்றி கூறுகிறார்) இடிக்கப்போவதாக சொல்லியுள்ளேன். பிரதிவாதி யார் என்றே தெரியாது என்று கூறியிருப்பதில் பிரதிவாதி வீட்டில் சுற்றுச்சுவரை இடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. என் பிரமாண வாக்குமூலத்தில் நான் பிரதிவாதி மீது காவல் துறையில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு ஆதரவாக புகார் மனுவோ, மனு ரசீதோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. நான் சொல்வதுபோல் பிரதிவாதி எந்த செயலும் செய்யவில்லை என்றாலும் உண்மையில் அவ்வாறு எதாவது செய்திருந்தால் நான் காவல் துறையில் புகார் அளித்திருப்பேன் என்றாலும் இல்லை. வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.307/2A1E1 ஆகும். புல எண்.307/2A1E1 என்பது தான் வழக்கு சொத்து என்பதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். புல எண்.307/2A1E1 என்பது வழக்கு சொத்திற்குரியது என்பதை காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயில், வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 3 பட்டாவில் புல எண்.307/2A1E1 காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

7. வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்ன விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது என்றால் 9830 சதுரடி காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் முனியம்மாளுக்கு சொத்து எப்படி வந்தது என்ற விவரம் காட்டப்படவில்லை என்றால் அதில் பூர்வீக சொத்து என்று காட்டப்பட்டுள்ளது. முனியம்மாளுக்கு பூர்வீக சொத்து என்று 9930 சதுரடி என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால சரிதான். வா.சா.ஆ 1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள 9730 சதுரடிக்கான பட்டாவோ, கிரைய ஆவணமோ, தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கிற்கு அது சம்மந்தமில்லாதது என்பதால் அதை நான் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ 1ல் 1 பாகம்தான் எனக்கு உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

8. வா.சா.ஆ 1 தவறான ஆவணம் என்றாலும் இல்லாத ஆவணத்தை எனக்கு உயில் எழுத முடியாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் சொல்லமுடியுமா என்றால் வடக்கே சின்னப்ப ரெட்டி வீடு, அன்புரோஸ் காலி மனை, தெற்கே புல எண்.307/6 குட்டை ஆகும், கிழக்கே குட்டை, மேற்கே என் தாயார்

எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்தாகும். வழக்கு சொத்திற்கு மேற்கே என் தாயார் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்த சொத்துதான் எனக்கு உரிமையான சொத்து என்றால் தவறானது. வழக்கு சொத்திற்கு மேற்கே மட்டும்தான் எனக்கு வா.சா.ஆ1 செட்டில்மெண்ட் எழுதப்பட்டுள்ளது என்றால் தவறு. வழக்கு சொத்தின் கிழக்கே குட்டை இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த குட்டையை சுற்றி சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

9. குட்டையை சுற்றி சுற்றுச்சுவர் எழுப்பிவிட்டு தற்போது பிரதிவாதியிடம் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் இல்லை. குட்டைக்கு வடக்கு பக்கம்தான் சின்னப்ப ரெட்டி, பிரதிவாதி உள்ளார்கள் என்றால் சின்னப்ப ரெட்டி, அன்புரோஸ் காலிமனை உள்ளது. எனக்கு பிரதிவாதி யார் என்று தெரியாது. இறுதியாக என் வீட்டிற்கு எப்போது சென்றேன் என்றால் பணிக்கு போகும் நாட்கள் தவிர மீதி நாட்கள் என் வீட்டில்தான் இருப்பேன். இறுதியாக வழக்கு சொத்தை எப்போது பார்வையிட்டேன் என்றால் தினமும்தான் பார்க்கிறேன். வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள குட்டையை சுற்றி உள்ள சுற்றுச்சுவரை பார்த்தேனா என்றால் இல்லை. அந்த குட்டையில்தான் பிரதிவாதிகள் அவர்களது வீட்டின் கழிவுநீரை கடத்துகிறார்கள் என்றால் தவறு. பிரதிவாதிகள் என் இடத்தில் கழிவுநீரை விடவில்லை என்றாலும் குட்டையில்தான் கழிவுநீரை கடத்துகிறார்கள் என்றாலும் சரியல்ல.

10. எவ்வளவு சதுரடிக்கு உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் 2970 சதுரடிக்கு உயில் எழுதப்பட்டுள்ளது. எந்த புல எண்ணிற்கு எனக்கு 2970 சதுரடி உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் புல எண்.307/2A1E1 ல் எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ 3 பட்டாவில் புல எண்.307/2A1A ல் என்ன விஸ்தீரணம் காட்டப்ட்டுள்ளது என்றால் கண் கண்ணாடி இல்லாததால் என்னால் படிக்கமுடியாது. புல எண்.307/2A1A ல் மொத்தமே 1 ஏர்ஸ்தான் உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ 3 ல் பட்டா எண்.892 என உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டாவும் பட்டா எண்.892 க்குரிய முனியம்மாள் பெயருக்குரிய பட்டா என்றால் இல்லை. எனக்கு தமிழ்படிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பட்டாவில் முனியம்மாள் என உள்ளது என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ 3 பட்டாவிலும் முனியம்மாள் என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 பட்டாவிலும் என்னிடம் காட்டப்படும் பட்டாவிலும் பட்டா எண்.892 என

உள்ளது என்றால் சரிதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பட்டா எண்.892 பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பி.வா.சா.ஆ 1 பட்டாவில் 1 ஏர்ஸ்தான் உள்ளது என்றால் அந்த ஆவணம்நான் தாக்கல் செய்யவில்லை. ஆனால் அதில் 1 ஏர்ஸ்தான் உள்ளது. 1 ஏர்ஸ் என்பது 1070 சதுரடி என்றாலும் எனக்கு 2970 சதுரடிக்கு உயில் எழுதியிருப்பது சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 3 பட்டாவில் உள்ள 326/13 வழக்கு சொத்து இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்பம புல எண்.326/13 க்கான பட்டாவானது கோவிந்தசாமி மனைவி முனியம்மாள் பெயரில் பட்டா எண்.7168 ல் உள்ளது என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் பட்டா எண்.7168 பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

12. எனது சொத்து 1 ஏர்ஸ்தான் என்றாலும் நான் தவறுதலாக வா.சா.ஆ 3 பட்டாவை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 1, வா.சா.ஆ 2 ஆவணங்களை எந்த மூல ஆவணமும் இல்லாமல் தயார் செய்துள்ளேன் என்றாலும் பிராதில் வழக்கு சொத்து விவரத்தில் மேற்கேதான் ஆவண எண்.2989/2008 என வா.சா.ஆ 1 ஐ காட்டியுள்ளேன் என்றாலும் எனவே வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையோ அனுபவமோ இல்லை என்றாலும் சரியல்ல. என் வீட்டிற்கும் பிரதிவாதி வீட்டிற்கும் எவ்வளவு உள்ளது என்றால் தெரியாது. பிரதிவாதி குட்டையில்தான் கழிவுநீரை விடுகிறார்கள் என்றாலும் என் சொத்தில் விடவில்லை என்றாலும் என் சொத்து பிரதிவாதி சொத்தில் இருந்து 4 வீடு தள்ளியுள்ளது என்றாலும் தவறு.

13. எனது பிராது சொத்து விவரத்தில் பிரதிவாதி வழக்கு சொத்திற்கு வடக்கேயும் குட்டை கிழக்கேயும் இருப்பதாக காட்டியுள்ளதில் பிரதிவாதி நேரடியாக குட்டையில்தான் கழிவுநீரை விடுவார் என்றாலும் என் சொத்தில் விடமாட்டார் என்றாலும் இல்லை. வழக்கு சொத்தின் கிழக்கே உள்ள குட்டையை நான் ஆக்கிரமிப்பு செய்து சுற்றுச்சுவரை எழுப்பியுள்ளேன் என்றாலும் நான் காவல் துறையில் பணிபுரிவதை சாதகமாக வைத்து கொண்டு அங்குள்ள நபர்களை மிரட்டி வருகிறேன் என்றாலும் இல்லை. பிரதிவாதி என் சொத்தில் கழிவுநீரை விடுகிறார்கள் என்பதை காட்ட புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்றுதான் நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேன். பிரதிவாதி குட்டையில் சுற்றுசுவர் கட்டியுள்ளார் என்பதை காட்டவோ, கழிவுநீரை கடத்துவதை காட்டவோ நான் நீதிமன்ற

ஆணையர் நியமணம் கோரியுள்ளேனா என்றால் அரசு சொத்தை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் சொத்தை பொறுத்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னிடத்தில் கழிவுநீரை கடத்துகிறார் என்பதை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமணம் கோர ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது. எனக்கு என்ன ஆட்சேபணை என்றால் நீதிமன்றம் அனுமதி கொடுத்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் பொய்யாக சங்கதிகள் சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)